MUTHTHARASI - Art Literary Culture Tamil Journal, Madurai.
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்,மதுரை.
VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

ஆசியநாட்டுச்சிறுகதைகளில் அழகியல்கூறுகள்

ஞா.விஜயலட்சுமி, முனைவர் பட்ட ஆய்வாளர்(தமிழ்), அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி) சிவகாசி மதுரை காமராசர்ப் பல்கலைக்கழகம். vijikarthi23511@gmail.com https://orcid.org/0009-0001-9425-3812	முனைவர்பா. தமிழரசி, (ஆய்வு நெறியாளர்) உதவிப்பேராசிரியர்,(தமிழ்த்துறை) அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி (தன்னாட்சி) சிவகாசி

DOI 10.5281/zenodo.17115833.

Abstract :

Tamil literature is diverse. In contemporary literature, short stories reflect human behaviour like a mirror. The evolution of social conditions in Diaspora literature includes aesthetic elements such as imagination, emotion, philosophy, visual, symbolism are included in this research summary which is intended to examine and summarize how the above has been done.

Key Words : Aesthetic elements, Migration, imagination, philosophy, symbolism, emotion, visual, creative imagination, fiction, Asylum, Conceptual imagination, Fantasy imagination.

இலக்கியத்திலும் பிற கலைகளிலும் "அழகுணர்வு" எவ்வாறு இடம்பெறுகிறது. "அழகு" எவ்வாறு பார்க்கப்படுகிறது என்பதை ஆராய்வதே அழகியல் துறையாகும். இயற்கைப் பொருட்களிலும் செயற்கைப் பொருட்களிலும் அழகைக் கண்டு அதை உணர்ந்து கொள்பவன் மனிதன். அழகை ஆராதிக்கின்றவன் "கவிஞன்", "அழகு" என்னும் கலையுணர்வுகண்ணால்மட்டும் நுகரப்படுவதுஅன்று. கண், காது, மற்றும் மனதால் அனுபவிக்கும் ஓர் இன்ப உணர்வை 'அழகு' என்று குறிப்பிடுவர். இதனை இன்னதென்று ஒரு வரையறைக்குள் உட்படுத்திக் கூற முடியாது. ஏனெனில் ஒரு பொருளில் காணப்படும் அழகுணர்வு ஒவ்வொருவருக்கும் வேறுபட்டுத் தோன்றுகிறது. பழந்தமிழினத்தின் அழகுணர்வை அதன் இலக்கியங்களிலும் பிறகலைகளிலும் மட்டுமல்லாமல் தமிழர் போற்றிய வாழ்க்கைக் கூறுகளிலும் காணலாம். புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் சமூக வாழ்வியல் முறைகள் அவர்களது படைப்பிலக்கியக் கூறுகளில் ஒன்றான சிறுகதைகளில் படம்பிடித்துக் காட்டப்படுகிறது. அச்சிறுகதைகளில் அவர்களின் வாழ்வியலைப் பரிணமிக்கும் கதைகளில் கற்பனை, தத்துவம், குறியீடு, உணர்ச்சி, காட்சி எனும் அழகியல் கூறுகளும் மிளிர்வதை ஆய்ந்து தொகுப்பதே

http://Creativecommons.org//license/by/4.0/.

இக்கட்டுரையின்நோக்கமாகும்.

தமிழும் அழகியலும்

முத்தமிழாகஇயங்கும் 'தமிழ்மொழி உலக மொழிகளுக்கெல்லாஉரம் நல்கும் உயர்ந்த மொழி அது பழமையும், இளமையும் உடைய மொழியாகப் பல்லாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் திகழ்ந்து கொண்டிருக்கிறதுஎன்றால் அது அழகியலைதன்னகத்தேகொண்டிருப்பதுதான்.

கவிஞன் தான் உணர்த்த இருக்கும் கருத்துக்களை முழுமையாக வெளிப்படுத்த அழகியலை பயன்படுத்துகிறான். இதன்மூலம் படைப்பு முழுமை அடைகிறது. படைப்பின் வெற்றியை அடைகிறான். அழகியலின் அடிப்படைக் கூறுகள் யாவும் கவிதைகளில் மட்டுமல்லாது சிறுகதைகளிலு ம் வெளிப்படுகிறது. அதுவும் புலம்பெயர் இலக்கியங்களில் புலம்பெயர்ந்த தமிழர்களின் வலிகளும், சொல்லொண்ணா துயரங்களும், அந்நிய நாட்டில் இணக்கமின்மை மொழிப் புரிதல், காலச் சூழ்நிலை, பொருளாதார நெருக்கடி எனப் பல இடங்களில் சிறுகதைகளாகப் பதியப் பெற்ற வாழ்வியல் கூறுகளில் காணலாகும் அழகியலைத் தெரிவு செய்து வகைமைப்படுத்துகிறது இக்கட்டுரை.

அழகியல் கூறுகள்

கற்பனை நயம்

கவிஞன் அனுபவித்த அனுபவத்தை நாம் அனுபவிக்க வேண்டுமாயின் கற்பனை இன்றியமையாது வேண்டப்படுகின்றது 'புலன்கள் நேரே ஒரு பொருளை அறியாத காலத்திலும் அந்த பொருளைத் தம் நினைவில் கொண்டு வந்து அதனிடத்து மீண்டும் தம் அனுபவத்தை உருவாக்குதலைக் 'கற்பனை' என்பர்.

படைப்புக் கற்பனை

கவிஞன் ஒருவன் தன் அனுபவத்தில் பல பண்புகளை ஒருவிதக் கட்டுப்பாடுமின்றித் தானாகத் தேர்ந்தெடுத்து அவற்றினைத் தொடுத்துப் புதியதொரு வடிவினைப் படப்பது "படைப்புக் கற்பனையாகும்".

'அப்பாசிகள்' என்னும் சிங்கப்பூர் சிறுகதையில் "தானே கதை சொல்லுதல்" எனும் திறன் அடிப்படையில் சிறுகதை வடித்திருக்கிறார் இக்கதையில் மைக்கேல்சாங் என்பவருக்கும் தனக்குமான நட்பை உரையாடல் ஊடே விவரிக்கிறார் இருவரும் பணி நிமித்தமாக பணிமாற்ற முறையில் ஒன்றாக வேலை செய்து வந்தவர்கள் மும்மொழி பேசும் நாடு (சிங்கப்பூர் என்பதால் மதூர் எனும் மலாய்காரரோடு

http://Creativecommons.org//license/by/4.0/.

எப்போதும் இவர்களுக்குள் மதம் தொடர்பான தர்க்கவாதம் ஏற்படுவதுண்டு இயல்பாக நடக்கும் இச்சிறுகதையின் ஓட்டத்தில் “சிறிது நேரத்தில், நான் அந்த டவரின் மேலே ஏறிக் கொண்டிருந்தேன் காற்றில் பறப்பது போன்ற இனிய அனுபவம் நெஞ்சுக்குள் கிண்ணென்று ஒரு நொடி வலி, உடனே என் மனைவியைப் பார்க்க வேண்டும் என்று ஏனோ தோன்றியது எனக்கு கதவிடுக்கில் மறைந்திருந்த நான் அவளை அப்படியே அள்ளி அணைக்க ஆயத்தமானேன் தொலைபேசி தந்த செய்தியைக் கேட்டு அவள் மயங்கிச் சரிந்தாள். படக்கென்று ஓடி அவளைத் தாங்கினேன் என்னானது எனக்கு திடீரென்று என் கைகளைக் காணவில்லை?” (5:12pm, எம்.கே.குமார், அப்யாசிகள் ,ப.எண்:18)

இக்கதையில் ஆசிரியர் மரணம் நிகழப்போகிறது என்பதை அறிவிக்காமல் இயல்பான யதார்த்த வகையில் எவ்விதக் கட்டுப்பாடும் இன்றி புதியதொரு முறையில் படைத்திருக்கிறார் தன் அனுபவத்தில் கண்ட கற்பனைக்கதையை இயல்பான எழுத்தாக்கத்தில்வடித்திருக்கிறார் கதையின் இறுதியில் தான் தனக்கு என்ன நேர்ந்தது என்பதைகூறுகிறார்

“அலுமினியப் பறவைகள் என்ற சிறுகதையில் கதையின் தொடக்கத்திலேயே மரணம் நிகழப் போகிறது என்பதைக் குறியீடாக வாசகர்களுக்கு முன்னொட்டு தருகிறார். “பழுதாகி இருந்தாலோ என்னவோ ஓரிடத்தில் இரண்டுக்கு இரண்டடியில் அதனை நீக்கிப் புதியதை வைத்து இணைத்திருந்தார்கள் விமானத்தின் முதுவல் அவனைக் கலவரப்படுத்த நேற்றிரவு அவன் கண்ட கனவு நினைவுக்குள் சுழன்று, இயங்கி, கனத்து நெருக்க முயன்றது.” (5:12 pm, எம்.கே. குமார், அலுமினியப் பறவைகள் ப.எண்: 19) இவ்வாறு கதைத் தொடக்கமே கலவரம் உண்டாக்க அடுத்ததாக என்ன நிகழும் யாருக்கு என்ன பிரச்சனை என நம் எண்ண ஓட்டம் பதட்டத்துடன் கதைக்குள் பயணிக்க வைக்கிறது

கதைத் தலைவன் சுந்தர் சிங்கப்பூருக்கு வந்தால் நல்ல வாழ்வு பிறக்கும் என நினைத்து கம்மாய் அருகில் கிடந்த தன் புன்செய் நிலத்தை விற்று வெளிநாடு வந்தவன் மிகைபநேரப் பணி நெற்றிக்கருகில் இருக்கும் தூக்கம். அவ்வப்போது ஊரிலிருந்து வரும் போன் அழைப்புகள் என நகர்ந்த அவன் வாழ்க்கையில் எச். ஆருடன் (மனிதவள அதிகாரி) ஏற்பட்ட மனக்கசப்பால் வேலையை விட்டுச் சென்றாக வேண்டிய நிலையில் இருக்கிறான் காரைக்குடியிலிருந்து கணவனைப் பார்க்க வேண்டும் என்று வந்த மனைவி காயத்ரியோடு திருமணமாகி ஏழு ஆண்டுகள் ஆகிவிட்டது. அவள் இன்றளவும் கருத்தரிக்கவில்லை என்ற கவலை வேறு இருவருக்குள்ளும். சொந்த ஊருக்கே திரும்பி விடலாம் என

http://Creativecommons.org//license/by/4.0/.

நினைத்த இருவரும் சிங்கப்பூர் விமான நிலையத்திலிருந்து இந்தியா புறப்பட எத்தனித்த வேளையில் கடவுளும் அவர்களுக்கு கருணை காட்டவில்லை.

"எல்லோரு ம் பார்க்க வருகிறார்கள் அவனை . அனைவருடைய முகத்திலு ம் சோகம் படர்ந்திருந்தது . சிங்கப்பூரிலிருந்து வந்த விமானம் விபத்துக்குள்ளானதாக எல்லாரும் பேசிக் கொள்கிறார்கள் ." (5:12pm, எம்.கே. குமார், அலுமினியப் பறவைகள், ப.எண்:26)

இவ்வாறு கதையின் தொடக்கமும் முடிவும் கலவரத்தைத் தந்து என்ன நடந்திருக்கும் என்ற யூகிப்பை மிகுவிக்கிறது. கதையில் வரும் காயத்ரி, சுந்தர் இருவரது வாழ்க்கையில் விமானமே அனைத்திற்கும் முற்றுப்புள்ளி வைத்து விடுகிறது என்ற தொனியில் கதை முடிகிறது. இங்கு கதாப்பாத்திரங்களை கதைப்போக்கில் நகர்த்தி புதியதொரு பரிணாமத்தில் கதையை நிறைவு செய்திருக்கிறார்.

இயைபுக் கற்பனை

புற உலகில் காணும் நிகழ்ச்சி அகத்தில் அடங்கிக் கிடக்கும் உணர்ச்சியைத் தூண்டுகிறது என்றாலும், பெரும்பாலும் உள்ளனுபவமே (Inner Experience) அத்தகைய உணர்ச்சியைக் கிளர்ந்தெழச் செய்கிறது என்று சொல்லலாம். எனவே கற்பனையாற்றலைத் தூண்டுவதற்கு உள்ளத்தில் அடங்கியிருக்கும் உள்ளனுபவபமே தூண்டுகோலாக அமைகின்றது என்பது தெளிவாகின்றது இத்தகைய கற்பனையைத்தான் "இயைபுக் கற்பனை" என்று விளக்குகின்றார் வின்செஸ்டர்.

'நடப்பு' எனும் மலேசியச் சிறுகதையில் மலேசியாவின் கம்போங் நாட்டில் வசிக்கும் நல்லசாமி நடைப்போட்டியில் முதலாவதாக வந்து மலேசியாவிற்கு பெருமை வாங்கித் தருகிறார். அந்தப் புகழ்போதை அவரது மகனான குணசேகரனுக்குப் போகும் இடமெல்லாம் பெருமை கொள்ளச் செய்கிறது. அவர் இருக்கக்கூடிய தமிழர் பகுதியை ஜப்பான் கம்பெனி ஒன்று வாங்கி அங்கு இருப்பவர்களை வெளியேறும்படி கூற, குணசேகரனுக்கு அப்போது தான் புரிகிறது.

"அப்பாவின் புகழ் என்றுமே அவருக்கும் நாட்டுக்கும் தான். இயல்பு நிலை வாழ்க்கையில் எதுவும் மாற்றம் தரப் போவதில்லை". (அ.த.இ - நடப்பு - மா. சண்முகசிவா, ப.எண்: 187) என்ற வரிகள் புலம் பெயர்ந்த நாட்டில் பெரும்பான்மையோருக்கு கிடைக்கக் கூடிய அங்கீகாரம் (இஸ்லாமியர்களுக்கு அங்கேயே பரம்பரையாய் வாழக்கூடியத்தமிழர்களுக்கு கிடைப்பதில்லை

இக்கதையில் மலேசிய நாட்டின் தற்போதைய 'நடப்பு அடிப்படையில் தன் தந்தை நல்லசாமிக்கு

http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

கிடைத்த பெருமை மற்றும் அங்குள்ள தமிழர்களுக்கு கிடைக்கக் கூடிய அங்கீகாரம் என்பதும் வேறு வேறு எனும் அரசியல் சூழ்நிலையைபுரிந்து கொள்ளும் குணசேகரன்மெல்ல தன் இயல்பு வாழ்க்கைக்குஏற்ப தன்னைப்பழக்கப்படுத்திக்கொள்கின்றான் என்ற உண்மையைஉரைத்து நாட்டு நடப்பியலோடுகற்பனையை ஈடேற்றும் விதத்தில் கதை வடித்திருக்கிறார்ஆசிரியர்

"காத்திருப்பு" என்ற இலங்கைச்சிறுகதையில் சோமண்ணன்இலங்கையாழ்ப்பாணத்திலிருந்து தன் மனைவி இரண்டு குழந்தைகளை விட்டு பிரான்ஸ் நாட்டிற்குப் புகலிடமாக வந்து வேலை செய்து வருபவர். தன் சொந்த நாட்டில் நடந்தேறும் போரும், தன் இன மக்களின் அவல நிலையும் அவரை மௌனத்தில் ஆழ்த்தி விடுகிறது. இதனால் உயர் ரத்த அழுத்தம் ஏற்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்படுகின்றார்.

கொஞ்ச நாளிலேயே அவரது மனைவி, குழந்தைகளுக்குபிரான்ஸ் நாட்டுக் குடியுரிமை கிடைத்து அவர்களைக்காணக், கண்டும் அவரால் முழுமையாகமகிழ்ச்சி கொள்ள முடியவில்லை

இக்கதையில் சோமண்ணன் தனக்கும் தன் குடும்பத்திற்கும் விடிவு கிடைத்தது போல தன் இனத்திற்கான விடிவு என்றுமே தான் நினைத்தது போல நடவாது என்ற இயலாமையைய் இக்கதை உணர வைக்கிறது. இலங்கையில் போர்ச்சூழலோடு அகதியாய் சென்ற நாட்டில் புகலிடமாய்க் குடும்பத்தோடு வசிப்பவர்கள் பேறு பெற்றவர்கள் என்ற உலக நடப்பியல் நிலையை தன் கற்பனையோடு பதிவு செய்திருக்கின்றார் ஆசிரியர். இங்கு சோமண்ணன் போன்று அடையாளம் தேடி புகலிடம் தேடுபவர்கள் பல பேர் இருக்கிறார்கள்.

கருத்துவிளக்கக்கற்பனை

கவிஞன் தான் கண்டவற்றை அப்படியே கூறாது அக்காட்சிகளால் தன் உள்ளத்தில் கிளர்ந்தெழும் உணர்ச்சிகளை மட்டிலும் சித்தரித்தால் அதனை "கருத்து விளக்கக் கற்பனை" என்றே கூறலாம். ஒரு நிகழ்ச்சியிலிருந்தோ அல்லது பொருளிலிருந்தோ அதன் ஆன்மீக மதிப்பை அல்லது உட்குறிப்பை மட்டிலும் கண்டு, அவையடங்கிய பகுதிகளையோ அன்றி தன்மைகளையோ எடுத்தும் காட்டுவது "கருத்து விளக்கக் கற்பனையாகும்" என்று வின்செஸ்டர் கூறுவார்.

"கொடும்பாவி" என்னும் இலங்கைச் சிறுகதையில் உள்ளூர் பண்ணையக்காரனான கதிர்வேற்பிள்ளையின்நிலத்தை நம்பி ஐம்பது குடும்பங்கள் வாழ்வு நடத்தி வந்த நிலையில் தனது தனிப்பட்ட கோபத்தினால் நிலத்தை மலடாக்கி அத்தனைக் குடும்பத்தின் சாபத்தையும் வாங்கிக்

http://Creativecommons.org//license/by/4.0/.

கொண்டார். உள்ளூர் சம்சாரிகளின் அவலத்தை அறிந்த சின்னான் 'கொடும்பாவி' வேடமிட்டு பணக்காரர்களின் அசுத்த சிந்தனையை அழிக்க ஓலமிடுகிறான். "பஞ்சத்தை இழைத்தவனே, பழிகாரப்பாவியனே கொடும்பாவி கட்டியல்லோ உன்னை." (அ.த.இ - கொடும்பாவி - கே. டானியல் - ப.எண்: 49) என்று கூறி கதிர்வேற்பிள்ளையின் வாழ்க்கையிலே வந்து விட்டுப் போன கர்ண கொடூரச் செயல்களைச் சின்னான் குத்திக் கிழிக்கின்றான். குறிப்பு: இலங்கையில் 'கொடும்பாவி' எனும் ஆகோர வேடமிட்டு பிணம் இருப்பதாக எண்ணி அழுதால் நாட்டில் மழை பெருகும் விவசாயம் செழிக்கும் என்பது நம்பிக்கை.

அவ்விதமே இக்கதையில் சின்னான் எனும் பாமரன் மூலமாக பெரும் நிலத்தை உடைய கதிர்வேற்பிள்ளையின் அகந்தையையும், நிலம் உடையவர்கள் சம்சாரிகளுக்கு (விவசாயிகளுக்கு) செய்யும் கொடுமையையும் நின்று கேள்வி கேட்க வைத்திருக்கிறார் கதையாசிரியர் இவ்வாறு கிராமத்து நம்பிக்கைகளுக்கு மத்தியில் 'முதலாளித்துவம் எனும் அடிமைத்தனத்தைதகர்த்து எறிய 'கொடும்பாவி' மூலம் தன் கருத்தை கற்பனையின் மூலமாக விளக்கிச் சென்றிருக்கிறார்.

வெறுங்கற்பனை

"வெறுங்கற்பனை" என்பது சுவையற்றதும் கற்பனைக்கு முரணானதும் அன்று. அதிலிருந்து சிறிது வேறுபட்டது சிறிது மிகையானது எனலாம். அந்த வேறுபாடும் மனக்கண் காணும் காட்சியால் ஏற்பட்டது அன்று. மனம் உணரும் உணர்ச்சியின் தன்மையால் ஏற்பட்டது எனல் வேண்டும். புலவரின் உணர்ச்சி வேடிக்கையாகவும், விளையாட்டாகவும் அமையும் போது ஆழ்ந்த பண்புகள் அற்ற நிலையற்ற வெறுங்கற்பனைகள் தோன்றும். புலவரின் உணர்ச்சி ஆழமுடையதாகவும் உயர்வுடையதாகவும் அமையும் போது நிலைபெற்ற விருப்பமுள்ள கற்பனைகள் தோன்றும். "5:12" எனும் சிறுகதையில் சிங்கப்பூர் எனும் பெருநகரத்தில் எங்கோ ஒளிந்திருக்கும் சற்று வித்தியாசமான மனிதர்களையும் அவர்களுடைய சிக்கல்களையும், சற்று வேடிக்கையாகவும் விளையாட்டாகவும் தான் கடந்து செல்கின்ற பாதையில் தினமும் கவனிக்கும் போது அவர்கள் பேசுவது கற்பனையல்ல அது ஆழமுடையதும், உயர்வானதும் கூட என்ற எண்ணம் மேலோங்க அதை சிறுகதையாகப் படைக்கிறார்.

இந்திரா காந்தியுடன் தொடர்பில் இருப்பதாகநம்பும் மனம் பிறழ்ந்த முதியவர் ஒரு பெருநகரில் ஒரு புதரில் வாழ்வதே சட்டென வாசிப்புக்குள்ளே இழுக்கிறது. அவர் பேசக் கேட்டும் உரையாடல்கள்

http://Creativecommons.org//license/by/4.0/.

அனைத்தும் ஒரே சமயத்தில் ஒருவர் மனப்பிறழ்வு கொண்டவராகவும், புத்திசாலித்தனமானவராகவும் மாறி மாறிக் காட்டப்படுவது வசனங்களைப் பல்வேறு வகையில் கதைக்குள்ளே உள்வாங்கிச் செல்ல வைக்கிறது.

"சரி, இந்தராகாந்தியிடம் எப்போது பேசினீர்கள்" "நேற்று, ராமேஸ்வரம் அருகே ஒரு பாலத்தில்…"
"சரி நாளை வா"
"நாளை எத்தனை மணிக்கு" "மாலை 5:12க்கு"
"ஏன் அந்த நேரம்" (5:12pm-எம்.கே. குமார்-ப.எண்:113)

என்பது போன்ற உரையாடல்கள் ஊடே கதை பயணிக்கிறது அவ்வுரையாடல்கள்நடுவே அம்முதியவர் பேசுவது அத்தனையும் இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு நடந்த உண்மை சம்பவங்கள் அவ்வகையில் வெறுங் கற்பனை கதையானாலும் கற்பனைக்கும் காரணமான உணர்ச்சியை விழுப்பம் உடையைதாக கதாபாத்திரங்களுக்குவலு சேர்த்து கதையை முடித்திருக்கிறார்

குறிப்பு: 5:12 pm - காந்தி சுட்டுக்கொல்லப்பட்ட நேரம்.

உணர்ச்சி அழகியல்

"உணர்ச்சி" என்பது மனிதனின் மனநல செயல்பாட்டு அனுபவம் ஆகும். உணர்ச்சி எனும் கூறு பெரும்பாலும் மனநிலை, குணாம்சம், ஆளுமை ஒழுங்கமைதி மற்றும் ஆர்வமூட்டல் ஆகியவற்றுடன் பிணைந்துள்ளது. கவிஞர்கள் தம் உள்ளத்தில் எழும் உணர்ச்சியை கருத்தாக்க அடிப்படையில் வெளிப்படுத்த படைப்பை மேற்கொள்கின்றனர். அதற்கு 'உணர்ச்சி அழகியல்' எனும் உத்தியை கையாளுகின்றர் அது புலம் பெயர்ந்தோர் எழுதிய சிறுகதைகளின் சமூக வாழ்வியலை பரிணமிக்கும் கதைகளில் மிகுதியாக தெரிகிறது.

'உதிரிகள் எனும் சிறுகதையில் புலம்பெயர்ந்த நாடான சிங்கப்பூரில் வாழும் மூத்தகுடி தமிழர்களில் ஒருவரான சாமிநாதன் கலைநிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க வந்தபோது அங்குள்ள இளம் தலைமுறையினர் நாகரிகம் இல்லாது மேடையில் வந்து செல்லும் பிரபலங்களின் அந்தரங்க விஷயங்களைஅம்பலமாகப் பேசி சிரிக்கின்றனர் இதனை கண்டு மனம் பொறுக்காத சாமிநாதன்,

"ஏண்டா வேலையத்த பசங்களா! இந்தமாதிரி இடங்கள்லே! இப்படி நடந்துகிட்ட மத்த இனத்தவங்க நம்மைபத்தி என்ன நினைப்பாங்க! இப்படி நீங்க செய்யிறது நம்ம இனத்துக்கே

http://Creativecommons.org//license/by/4.0/.

அவமானம்!" (அ.த.இ - உதிரிகள் - புதுமைதாசன் - ப.எண்: 217) என்கிற வரியில் மும்மொழி பேசும் சிங்கப்பூரில் (மலாய், சீனம், தமிழ்) மற்ற இனத்தவர் தமிழரை ஏளனமாக நினைக்கக் கூடாது மரியாதையோடு நாம் பொது இடங்களில் நடந்து கொள்கின்ற முறையிலேயே மற்ற இனத்தவர் தமிழரோடு பழக முற்படுவர் அவ்வாறு அல்லாது தமிழ் மக்களே அரைகுறை மலாய் கலந்த தமிழில் சாமிநாதனை தரைக்குறைவாகப்பேசுகிறார்கள்

இக்கதையில் பெருநகரமான சிங்கப்பூரில் தமிழனுக்கு என இருக்கக்கூடிய பண்பாட்டை மறந்து தற்போதுள்ள இளம் தலைமுறையினர் நாகரிக மோகத்தால் கலாச்சாரத்தைப் பேண மறுக்கின்றனர் உணர்ச்சி வேகத்தில் அவர்கள் உபயோகிக்கும் சொற்பிரயோகமும் தமிழருக்கே உண்டான மரியாதையைக் கெடுக்கிறது பண்பாட்டை பேணிக் காக்க வேண்டிய இடத்தில் சாமிநாதன் போன்று உணர்ச்சியை வெளிப்படுத்த வேண்டியுள்ளது "அணி" என்னும் சிறுகதையில் விக்டர் என்ற தமிழ் குடிமகன் தந்தை தொழிலையே மகன் செய்ய வேண்டும் என்ற மடமையை மாற்ற நினைத்தவன். இலங்கை அரசாங்கத்தை எதிர்த்து தேர்தலில் நின்று வெற்றி வாகை சூடிய போராளி. இதைப் பொறுக்காத சிங்களத்தவர் "காலம் கலிகாலம். அம்பட்டனும் தேர்தலுக்கு நிற்கிறான். எல்லாம் இரண்டு காசு துள்ளுவதினால் வந்த வினை." (அ.த.இ. - அணி - எஸ் பொன்னுத்துரை ப.எண்: 56) என்று கூறி சாதிப்பகையைத் தூண்டிவிட இரத்தம் என்றுமே சிவப்புதான். ஒரே வர்க்க ஒற்றுமையை சாதியின் பெயரைச் சொல்லி சிதைத்து விட எண்ணும் பிற்போக்கு வாதிகளுக்காகக் கடைசி வரை தன் எண்ணத்தில் இருந்து மாறாது உயிர் விட்டான்.

தமிழர்களைபிரித்தெறிய முயற்சிக்கும் ஒன்று சாதி சிறுவயதில்விக்டரின் மனதில் புதையுண்டசாதி, அடக்குமுறை அதிகாரம் யாவும் உணர்ச்சி என்ற கூற்றின் வழியாக கதைக்கு வலு சேர்க்கிறது. அந்த மிகு உணர்ச்சியே கதை வாசிக்கும் வாசகர்களுக்குபுரட்சிக்கு வித்திடுகிறது

காட்சி அழகியல்

ஒரு கவிஞன் தாம் எழுதக்கூடிய கதையில் தன்னுடைய படைப்பு எதுவாக இருந்தாலும் அந்த படைப்பைப் படிப்பவர்கள் எளிமையாக புரிந்து கொள்ளவேண்டும் என்பதற்காக அதை காட்சிப்படுத்திக் கூற முற்படுவர். "காட்சி" என்பதனை "படிமம்" என்றும் பொருள் கொள்ளலாம். கதையொன்றினை நாம் படிக்கும் போது அக்காட்சி நம் மனக் கண்முன்னே விரிந்து செல்லும் அழகியலே "காட்சிஅழகியல்" ஆகும்.

http://Creativecommons.org//license/by/4.0/.

‘தோணி எனும் சிறுகதையில் தன் கிராமத்தின் கடற்கரை அழகை கதைத்தலைவன்கூறக் கேட்கும் போது அந்த காட்சி கண்முன்னே விரிகிறது. “கருநீலமாகப் பரந்து கிடக்கும் வங்காள விரிகுடாவைப் பார்த்தவாறு எங்கள் கிராமம் இருக்கிறது சோழகக் காற்றுச் சரசரத்துக் கொண்டிருக்கும் தென்னை மரங்களடியிலே அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏறக்குறைய முப்பது ஓலைக் குடிசைகள் இருக்கின்றன (அ.த.இ - தோணி - வ.அ. இராசரத்தினம் - ப.எண்: 31) என்ற வரியில் தன் கிராம அழகை விவரிக்கும் இக்கதையின் முன்னுரையில் நெய்தல் நிலத்தின் அழகும், கடல் பகுதி என்பதால் உப்புக்காற்றோடு எந்நேரமும் உலா வரும் தென்னை மரங்களினூடே தவழ்ந்து வரும் தென்றலும், கடலிலே வாழ்வாதாரத்தை மேற்கொள்ளும் கட்டுமரக்காரர்களின் ஓலைக் குடிசையும் அழகாக காட்சிப்படுத்தப்படுகிறது.

“பயணம்” என்னும் சிறுகதையில் எல்லோருக்கும் தான் பிறந்த ஊரின் மீது எப்போதும் தனி பிரியம் உண்டு. இக்கதையிலும் இலங்கையிலிருக்கும் திரிகோணமலைப் பட்டினத்தில் வாழ்வாதாரத்திற்காக வந்த பெரியவர் தன் முதுமைக் காலத்தை தன் சொந்த ஊரான மூதூரில் கழிக்க எண்ணுகிறார் அவரது எண்ணப் புலம்பலில், “எனக்கு திருகோணமலைப்பட்டினத்தில் தரிப்பதென்பது எம வேதனை. அப்பட்டிணத்தின் கந்தகச் சூடு என்றைக்குமே எனக்குப் பிடிப்பதில்லை. மாவலித் தேவியின் சீதளச் சூல்களை சுமந்து வரும் என்னூர்க் காற்றில் வேப்பமர நிழலில் அமர்ந்திருப்பது தான் எத்தனை சுகம்!” (இ.எ.இ.சி - பயணம் - அமரர் வ.அ. இராசரத்தினம் மூதூர் - ப.எண்: 34) என்று தன் சொந்த ஊரின் அழகு தனக்கு மட்டுமே தன்னிறைவைத் தரும் என்ற அடிப்படையில் கதை வாசிக்கும் வாசகர் மனக்கண்ணில்புலம் பெயர்ந்து வாழ்க்கை மேற்கொள்ளும் பலருக்கும் தன் பிறந்த மண்ணின் இடச்சூழலை ஒரு கணம் நினைவில் கொள்ள வைத்து விடுகிறது இக்கதை. ஒவ்வொருவருக்கும் தங்கள் சொந்த ஊரின் பிம்பத்தையும் தந்து விடுகிறது.

‘சக்கைவாகம்’ என்னும் சிறுகதையில் தெய்வானை இறந்த பின் நடக்கும் நிகழ்வை ஆசிரியர் இவ்விதமாக காட்சிபடுத்துகின்றார் “ஆ! என்ன விடுதலை அவள் தான் நினைத்தபடி மனோ வேகமாக எங்கும் போக முடிந்து. அவளுடைய உடல் காற்றாகிவிட்டதோ ! அல்லது உடலே இல்லையா! அவளுக்கு இரவுபகல் தெரியவில்லை அவளுக்குக் குன்றாத இளமையும், வற்றாத ஊக்கமும், எதையும் கிரகித்து அறிந்து கொள்ளும் அகன்ற மனமும் வாய்த்து விட்டது போலத் தெரிந்தது. தன்னுள்ளே ஒரு எல்லையற்ற ஆனந்த சுதந்திர உணர்ச்சி ததும்பி வழிந்து கொண்டிருந்தது (அ.த.இ - சக்கரவாகம் -

http://Creativecommons.org//license/by/4.0/.

இலங்கையர்கோன் - ப.எண்: 28)

மனிதன் இறந்த பின்னால் அவன் உடலுக்குள் நிகழும் மாற்றத்தை அவனே அறியமுடியாது. கூடியிருப்பவர்களுக்கு தங்கள் முன்னே இருப்பது பிணம் என்று தெரியும். ஆனால் இங்கே வேலுப்பிள்ளையின்மனைவிதெய்வானைஒரு நாள் இறந்துவிட, தான் வாழும் நாளில் செய்ய முடியாமல் போனவை அனைத்தும் இறந்த பின் முக்தி நிலை அடைந்ததையும், அவள் ஆனந்தமாக தன் இறப்பை ஏற்றுக் கொண்ட மனப்பக்குவத்தையும் கண்முன்னேஅழகாகக் காட்சிப்படுத்துகிறார்

தத்துவஅழகியல்

“தத்துவம்” என்பது கிடைக்கின்ற அனுபவங்கள் மூலமாக பிறக்கும். இலக்கியத்தின் தத்துவம் அழகியலின் ஒரு கிளையாகும். பல கவிஞர்கள் தத்துவ கருப்பொருள்களில் கவிதைகளும், கதைகளும் எழுதியுள்ளனர். அவர்கள் எழுதிய தத்துவ புனைகதைகளிலும், கவிதைகளிலும் கொண்ட பாத்திரங்களுக்குவலு சேர்த்து தன் கருத்தை ஆணித்தரமாகபலராலும் ஏற்றுக் கொள்ளும் படியாக தத்துவத்தைமுன் வைக்கின்றனர் புலம்பெயர்ந்து போகும் வாழ்க்கைச்சூழலில் வாழ்க்கை அனுபவபமே தத்துவமாக மலர்கிறது அவை சிறுகதைகளில் எங்கனம் இடம்பெறுகிறது என்பதை ஆய்வதே இத்தத்துவ அழகியலின் நோக்கமாகும்.

‘அவன் ஒரு இனவாதி’ எனும் சிறுகதையில் மைதிலி புலம்பெயர்ந்து அகதியாக லண்டனில் வாழத் தலைப்பட்டவள். கணவன் இல்லாது மூன்று பிள்ளைகளையும் வளர்த்துக் கொண்டிருக்கிறாள். லண்டனில் ஒரு வருடத்தில் ஏழாயிரத்துக்கும் மேற்பட்ட இனவாத தாக்குதல் நடக்கிறது. அதில் முக்கியமாகத் தாக்கப்படுபவர்கள் இந்திய, பாகிஸ்தானி, இலங்கையர்கள் தான். மைதிலி போதை வஸ்துக்களால்வாழ்க்கையைசீரழித்துக் கொண்டவர்களைத்திருத்துவதற்கானஸ்தாபனம் ஒன்றில் வேலை செய்கிறாள். அவளுடைய கௌன்சிலிங்கில் மனம் திருந்திய மக்கேல் என்பவன் இனவாதம் என்பதை மறந்துவிட்டான் என்றாலும்,

“நான் பிறக்கும் போது இனவாதியாகவா பிறந்தேன்? இந்த உலகத்தில் தங்கள் குடும்பத்தால் வஞ்சிக்கப்பட்ட என் போன்றவர்கள் உழைப்புக்கும் உரிய கூலி வசதி கொடுக்காமல் அரசாங்கத்தால் வஞ்சிக்கப்பட்டவர்கள் என்று எத்தனையோ ஆயிரம் பேர் இருக்கிறார்கள். இவர்கள் சரியாக வாழ வழியில்லாத வரை இனவாதம் இருக்கும்” என்கிறான். (அ.த.இ - அவன் ஒரு இனவாதி - ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் ப.எண்: 123)

http://Creativecommons.org//license/by/4.0/.

இந்த உலகை பொறுத்தவரையில் இனவாதம் என்பது தவறான ஒன்றுதான். ஒரு மனிதன் மற்றொரு மனிதனைத் தண்டிப்பதற்குச் சட்டத்தில் இடம் இல்லை. ஆனால் அனைவருக்கும் பொதுவுடைமை என்ற அடிப்படையில் நாட்டு அரசாங்கத்தில் முதலாளிகளுக்கு ஒரு மாதிரியும் உழைப்பாளிகளுக்கு ஒரு மாதிரியுமாகத் தான் சட்டம் இருக்கிறது. உழைப்பவனுக்கான ஊதியம் அது என்றுமே முதலாளிகள் சுரண்டிக் கொண்டே இருப்பதன் அவலத்தை தோலுரித்துக் காட்ட வழியில்லாத மைக்கேல் போன்றோர் "இனவாதம்" அது என்றுமே இருக்கும் என்று தன் தர்க்கத்தை முன் வைக்கிறான் இவ்வாறு தத்துவங்கள் கதைகளின் முடிவிலோ ,மரணத்தின் விளிம்பிலோ அல்லது வாழ்க்கை தரும் பாடத்தின் அடிப்படையில் பிறக்கும். ஒருவனுக்குள் பிறக்கும் தத்துவ புரட்சி புலம்பெயர்ந்த நாட்டு அரசாங்கத்தைப்பொறுத்தவரையில்கம்யூனிசவாதிகளாகஇனம் காட்டப்படுகிறது இந்த உலகில் எல்லாம் இருப்பவனுக்கு தத்துவங்கள் தேவைப்படுவதில்லை. இல்லாதவனுக்கே தத்துவங்கள் முகவரியாகிறது.

குறியீட்டு அழகியல்

"குறியீடு" ஆங்கிலத்தில் "SYMBOL" என அழைக்கப்படுகிறது. அது உருவ ஒற்றுமையாகவோ அல்லது பண்பு ஒற்றுமையாகவோ இருக்கலாம். உதாரணத்திற்கு பறவையான வெண்புறா சமாதானத்தின் குறியீடாக கொள்ளப்படுகிறது. இக்குறியீடு சிறுகதைகளில் கதை முழுவதிலும் முன்னிலை வகிக்கிறது. இக்குறியீடு ஒரு உயிருள்ளனவையாகவும், உயிரற்றதாகவும் இருக்கலாம்.

தென் தமிழக மக்கள் ஒவ்வொன்றிலும் நம்பிக்கை வைத்திருப்பது போல மும்மொழி பேசும் சிங்கப்பூரில் வசிக்கும் சீனர்கள் விலங்குகள் ராசியை கொண்டு வரும் என நம்புகின்றனர் குறிப்பு: நமது அண்டை நாடான சீனாவில் சீன சந்திர நாட்காட்டியைப் பின்பற்றி வருடாந்திர வகைப்பாடு அமைப்பு உள்ளது. இதில் 12 ஆண்டு சுழற்சியில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு விலங்கிற்கு ஒதுக்கப்படுகிறது. மேலும் அவ்விலங்கு ஒரு மனித ஆளுமையுடன் தொடர்புடையது என சீனர்களால் நம்பப்படுகிறது. மனித விளைவுகளைக் கணிப்பதில் மாதத்தை விட ஒருவரின் பிறந்த ஆண்டுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் சீனப்புத்தாண்டில் இந்நிகழ்வு அரங்கேறி கொண்டாடப்படுகிறது.

"நல்லிணக்கம்" எனும் சிறுகதையில் விலங்குகளில் குரங்கு அதிர்ஷ்டத்தைக் கொண்டு வரும் என்ற எண்ணத்துடன் மும்மொழி நாடான சிங்கப்பூரில் சிங்கைத் தமிழர்கள் குரங்கை ராமதூதனாக

http://Creativecommons.org//license/by/4.0/.

VOLUME – III ISSUE - I
AUG – 2025 E-ISSN : 2584 – 1238

நினைத்து வழிபடுவதும், சீனப்பெண் ஒருவர் நான்கு இலக்க லாட்டரிச் சீட்டைக் குரங்கு எடுத்துத் தந்தால் அதிர்ஷ்டத்தால் பணம் கிடைக்கும் என நம்புவதும், "குரங்கு" இக்கதையில் அதிர்ஷ்டத்தின் குறியீடாக முற்றிலும் சிங்கப்பூர் வாசிகளின் மன நிலையை கிண்டல் செய்யும் படியாக கதை அமைப்பு அமைகிறது.

"உதிரி உதிரியாக எழுதப்பட்டிருந்த எண்கள் கொண்ட சீட்டுகள் அதிலிருந்து விழுந்தன கீழே விழுந்த இன்னும் சில சுருட்டிய சீட்டுகளில் நான்கிலக்க எண்கள் எழுதப்பட்டிருந்தன. சிந்தும் சீட்டுகளையும் பொருட்படுத்தாமல் அவளும் குரங்கோடு ஓடிக்கொண்டிருந்தாள் (5:12 - எம்.கே.குமார்-நல்லிணக்கம் - ப.எண்:43) என்ற வரியில் குரங்கு வீசிய பித்தளை குண்டானால் அடிபட்டு பிளாஸ்த்திரி போடப்பட்டிருந்தும் குரங்கை துரத்தி ஓடி அதிர்ஷ்டத்தைத் தேடும் மேடம் குனிங் எனும் சீனப் பெண்ணுக்கு 'குரங்கு' முதலில் ஒரு ஐந்தறிவு கொண்ட விலங்கு என்பது நினைவில்லை. ஆறறிவு கொண்ட அப்பெண்ணிற்கு அதிர்ஷ்டம் கண்ணை மறைக்கிறது இக்கதையில் குரங்கு இந்து மதத்தில் தெய்வமாகவும், சீனப் பெண்ணுக்கு அதிர்ஷ்டம் தரும் விலங்காகவும், ஒரு குறியீட்டு அடையாளத்துடன் கதை முழுவதும் வருகிறது.

முடிவுரை

ஆசிய நாட்டுச் சிறுகதைகளான இலங்கை மலேசியா, சிங்கப்பூர் ஆகிய மூன்று நாடுகளின் சமூக வாழ்வியலை பறை சாற்றும் சிறுகதைகளில் அழகியல் கூறுகளான கற்பனை, தத்துவம், குறியீடு, உணர்ச்சி, காட்சி முதலியன எவ்விதமாக அச்சிறுகதைகளில் எவ்விடத்தில் நிலைபெற்று அழகியலை பரிணமிக்கிறது என்பதையும் அந்நாட்டுச் சூழலியலையும் விரிவாக இக்கட்டுரை வாயிலாக அறியமுடிகிறது.

துணைநூற் பட்டியல்

1. கந்தசாமி,சா.,(தொ.ஆ.), அயலகத் தமிழ் இலக்கியம், சாகித்ய அகாதெமி, புதுதில்லி, முதற்பதிப்பு 2004.
2. செல்வக்குமார் ,எஸ்.,(தொ.ஆ.), இலங்கை எழுத்தாளர்களின் இருபத்தாறு சிறுகதைகள், திருகோணமலை இலங்கை முதற்பதிப்பு 2002.
3. குமார்,எம்.கே., 5:12pm. சிறுகதைகள் யாவரும் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2017.
4. நடைராசன்,தி.சு., தமிழ் அழகியல் மரபும் கோட்பாடும், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை முதற் பதிப்பு 2016.

http://Creativecommons.org//license/by/4.0/.